பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

08 08 2025 FRIDAY 12.40 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகள் இன்றும் பாதிக்கப்பட்டன.
- பீகாரில் வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து, இதுவரை எந்த அரசியல் கட்சியும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
- திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் தேசிய நெடுஞ்சாலை சீரமைப்புப் பணிகளை மாற்றியமைக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- இமாச்சலப்பிரதேச மாநிலத்தில் நேரிட்ட சாலை விபத்தில், ஆறு பேர் உயிரிழந்தனர்.
- இந்திய பொருட்களுக்கு கூடுதல் வரி விதிப்பது இருதரப்பு நட்புறவை பாதிக்கும் என்று அமெரிக்க நாடாளுமன்ற வெளியுறவுக்குழு எச்சரித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள்—

<<<<<<>>>>>>

எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகள் இன்றும் பாதிக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

அதன்பின், கேள்விநேரம் தொடங்கியதும், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, முதலில் நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்ட மக்களவை, பின்னர் பிற்பகல் 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சினையை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டதால், முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>

நாட்டில் இந்த ஆண்டு இறுதிக்குள் சரக்கு போக்குவரத்து செலவு ஒன்பது சதவீதம் குறையக்கூடும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் சாலை கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக, போக்குவரத்து செலவினம் குறையக்கூடும் என்றார்.

இதன்காரணமாக, ஏற்றுமதி ஒன்றரை மடங்கு அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயம் மற்றும் அதனை சார்ந்த துறைகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிக முன்னுரிமை அளித்து வருவதாக கூறிய திரு நிதின்கட்கரி, இத்துறைகளின் வளர்ச்சி மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்றும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகளுக்கு பிறகு வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து, இதுவரை எந்த அரசியல் கட்சியும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கடந்த ஒன்றாம் தேதி வெளியிடப்பட்ட இந்த வரைவுப் பட்டியல் தொடர்பாக, வாக்காளர்களிடமிருந்துதான் நேரடியாக 6 ஆயிரத்து 257 கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதாகவும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

மேலும், 18 வயது பூர்த்தியடைந்த 36 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கக்கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் தேர்தல் ஆணைய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வசிப்பிட ஆதாரங்களை சமர்ப்பிக்காத வாக்காளர்கள், உயிரிழந்தோர் மற்றும் இடம்பெயர்ந்த வாக்காளர்களின் விவரம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், தமிழகத்திற்கு மத்திய அரசின் பங்குத் தொகையாக, 11 ஆயிரத்து 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மத்திய வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

*மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இதுவரை 10 ஆயிரத்து 426 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.*

*இம்மாநிலத்தில், ஆறு லட்சத்து 70 ஆயிரத்து 425 வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு, இதுவரை 6 லட்சத்து 7 ஆயிரத்து 51 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*நகர்ப்புற வீட்டுவசதித்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் வீடுகள் கட்ட அனுமதிகோரி தமிழக அரசிடமிருந்து இதுவரை கடிதம் ஏதும் வரப்பெறவில்லை என்றும் திரு மனோகர்லால் கூறியுள்ளார்.*

*<<<<<<<>>>>>>*

*தமிழகத்தின் திருப்பூர், ஈரோடு மாவட்டங்களை சுற்றியுள்ள பகுதிகளில் திட்டமிடப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை சீரமைப்புப் பணிகளை, பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், மாற்றியமைக்குமாறு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரியிடம் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுகுறித்து டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திருமதி சரஸ்வதி, பிஜேபி தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு அண்ணாமலை உள்ளிட்டோருடன் சென்று, திரு நிதின்கட்கரியை சந்தித்து இந்த கோரிக்கையை விடுத்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

*<<<<<<<>>>>>>*

*மருத்துவ சிகிச்சைகளுக்காக கடந்த ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் ஒரு லட்சத்து 31 ஆயிரத்திற்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்துள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.*

*மாநிலங்களவையில் எழுத்துமூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த எண்ணிக்கை இந்தியாவிற்கு வந்த மொத்த சுற்றுலாப்பயணிகளில் நான்கு புள்ளி ஒரு சதவீதம் என்று கூறியுள்ளார்.*

கடந்த ஐந்தாண்டுகளில் பங்களாதேஷை சேர்ந்தவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அதிக அளவில் இந்தியாவிற்கு வந்து சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் 10 ஆயிரத்து 298 கிராம பஞ்சாயத்துகளில் பாரத் நெட் திட்டம் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை இணையமைச்சர் திரு பெம்மசாணி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், தமிழகத்திற்கு இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 544 கோடி ரூபாயில் ஆயிரத்து 93 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

எஞ்சிய கிராமங்களில் தேவை அடிப்படையில் திருத்தப்பட்ட பாரத் நெட் திடடத்தின்கீழ் இணைப்பு வழங்கப்படும் என்றும் திரு பெம்மசாணி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் விதித்துள்ள கூடுதல் வரி, இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவை பாதிக்கும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளியுறவுக்குழு எச்சரித்துள்ளது.

இக்குழுவின் உறுப்பினரான Dems வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அதிபர் ட்ரம்பின் சமீபத்திய வரி விதிப்பு நடவடிக்கை, நீண்டகால முயற்சியின் பலனாக வலுப்படுத்தப்பட்டுள்ள அமெரிக்க – இந்திய நட்புறவை சீர்குலைப்பதாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இந்த பிரச்சினைக்கு பரஸ்பர நல்லெண்ண அடிப்படையிலும், இந்தியாவின் ஜனநாயக நன்மதிப்புகளை கருத்தில்கொண்டு சுமூக தீர்வுகாண வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>

இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகுவை, அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு ஜெ பி சிங் சந்தித்து பேசியுள்ளார்.

*இந்தியா – இஸ்ரேல் இடையேயான நீடித்த ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக திரு நெத்தன்யாகு தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.*

*குறிப்பாக, பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் பரஸ்பர நலன் சார்ந்த அம்சங்கள் குறித்தும் இந்திய தூதருடன் ஆலோசித்ததாக இஸ்ரேல் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த சந்திப்பின்போது, பிரதமர் திரு நரேந்திர மோடியின் வாழ்த்துகளை இஸ்ரேல் பிரதமரிடம் தெரிவித்த இந்திய தூதர், இருதரப்பு நட்புறவை ஆக்கப்பூர்வமான முறையில் முன்னெடுத்துச் செல்ல இந்தியா உறுதிபூண்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.*

*<<<<<<<>>>>>>*

*சுதந்திர தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்க பல்வேறு துறைகளை சேர்ந்த சாதனையாளர்கள் மற்றும் புதுமை கண்டுபிடிப்பாளர்களுக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டு வருகிறது.*

*அந்த வகையில், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளைஞர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் வேளாண் துறை வளர்ச்சி குறித்து எடுத்துரைத்த தமிழகத்தின் கோவையை சேர்ந்த கல்லூரி மாணவிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.*

*(Voice Byte – மாணவி Prishaa – 38 Sec. )*

*<<<<<<<>>>>>>*

*இமாச்சலப்பிரதேசத்தின் சம்பா மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில், ஆறு பேர் உயிரிழந்தனர்.*

*இவர்கள் பயணம் செய்த வாகனம் Chanwas என்னுமிடத்தில் சாலையோரப் பள்ளத்தில் கவிழ்ந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு சுக்வீந்தர் சிங் சுகு, ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*<<<<<<<>>>>>>*

*பெருமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் மீட்புப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*இம்மாநிலத்தின் Dharali பகுதியில் சிக்கித்தவித்த குஜராத் மாநிலம் பனஸ்கந்தா மாவட்டத்தை சேர்ந்த 10 யாத்ரிகர்கள் ராணுவ ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டு ரிஷிகேஷ் வழியாக சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.*

*மத்திய அரசின் உதவியுடன் சாலை, மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் சீரமைக்கப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தமி கூறியுள்ளார்.*

*<<<<<<<>>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

*20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ரக்பி போட்டி, பீகார் மாநிலம் நாலந்தா மாவட்டத்திற்கு உட்பட்ட ராஜ்கிர் நகரில் இன்று தொடங்குகிறது.*

*இதில், ஒன்பது நாடுகளை சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.*

*<<<<<<<>>>>>>*

*கனடா ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் கனடாவை சேர்ந்த விக்டோரியா Mboko பட்டம் வென்றார்.*

*உலகின் முன்னணி வீராங்கனையான ஜப்பானின் Naomi Osaka-வை, அவர், 2-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் வென்றார்.*

*<<<<<<<>>>>>>*